[This question paper contains 2 printed pages]

Your Roll No...........................

5036

B.Com. (H)/II C

Paper XV– TAMIL Language

(Application of Language Skills and Prose Text)

*Time : 2 Hours* *Maximum Marks : 50*

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

*Note* :- The maximum marks printed on the question paper are applicable for the candidates registered with the School of Open Learning for the B.Com. (Hons.). These marks will, however, be scaled down proportionately in respect of the students of regular colleges, at the time of posting of awards for compilation of result.

**टिप्पणी** : प्रश्न-पत्र पर अंकित पूर्णांक 'स्कूल ऑफ ओपन लर्निंग' के बी. कॉम. (ऑनर्स) में प्रवेश-प्राप्त छात्रों के लिए मान्य हैं । नियमित विद्यार्थियों के लिए इन अंकों का समानुपातिक पुनर्निर्धारण परीक्षाफल तैयार करते समय किया जाएगा ।

1 வணிகக் கடிதம் என்றால் என்ன? அதன் உறுப்புக்களை விளக்குக. 10

(அல்லது)

உங்கள் நிறுவனத்திற்கு வேலைக்கென விண்ணப்பித்திருந்தவர் பற்றிய குறிப்புரை ஒன்று கேட்டுக் கடிதம் வரைக.

2 துறைமொழிச் சொற்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை? 10

(அல்லது)

பின்வரும் துறைச் சொற்களைத் தமிழில் மொழிப்பெயர்க்க.

i. Market

ii. Current deposit

iii Mixed Bank

iv. Power of Attorney

v Open cheque

vi Bill of exchange

3 பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து அதனடியில் கேட்கப்பட்டுள்ள 10

P.T.O.

கேள்விகளுக்கு விடை தருக

உலகப் புகழ் பெற்ற பாண்டிய நாட்டுத் துறைமுகம் ஒரு வளைகுடாவில் இருந்ததனால் முத்துக் குளிக்கும் இடமாகவும் சங்கு எடுக்கும் இடமாகவும் விளங்கியது. கொற்கையில் கிடைத்த முத்துக்கள் உலகப் புகழ்பெற்றவையாகும் சங்கப் புலவர்களும் இங்கு கிடைத்த முத்துக்களின் பெருமையைப் புகழ்ந்துள்ளனர். கொற்கை பாண்டிய இளவரசர்களுடைய இருக்கையாகவும் திகழ்ந்தது. யவனர்கள் 'கொல்கொய்' என்று குறிப்பிட்ட துறைமுகம் கொற்கையேயாகும். கடல் கொண்ட கபாடபுரம் கொற்கையாக இருந்திருக்கலாம் எனச் சில அறிஞர்கள் கருதுவர். பாண்டிய நாட்டின் தென்கோடியில் கன்னியாகுமரிக்கு அருகில் குமரித்துறைமுகம் இருந்தது. இது துறைமுகமாகவும் புனித நீராடும் இடமாகவும் கருதப்பெறுகிறது. தமிழ் நாட்டவரும் மற்றையோரும் இங்குப் புனித நீராடுவதுண்டு. குமரித்துறை முகத்துக்கருகில் குமரி என்னும் ஊரும் அங்கு ஒரு கப்பல் அமைக்கும் தொழிற்சாலையும் இருந்ததென்று யவனர்களுடைய குறிப்புகளில் இருந்து அறிகிறோம். பாண்டிய நாட்டின் மேற்குக் கடற்கரையில் விழிஞம் என்னும் துறைமுகப்பட்டினம் இருந்தது. ஆய்நாட்டுக் குறுநில மன்னர்கள் பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆவர். ஆய் நாட்டில் எலங்கோன் என்னும் துறைமுகம் இருந்ததென்று தாலமி என்னும் ஆசிரியர் கூறியுள்ளது விழிஞம் துறைமுகமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கேள்விகள்

i. கொற்கை எங்கு அமைந்திருந்தது? அது எதற்குப் பெயர் பெற்றது?
ii. குமரித் துறைமுகம் குறித்து யவனர்கள் குறிப்புகளால் அறியப்படுவன யாவை?
iii. விழிஞம் குறித்துத் தாலமி கூறும் கருத்து யாது?
iv. விழிஞம் துறைமுகம் இருந்த நாடு எது?

4 எவையேனும் *இரண்டு* கேள்விகளுக்கு விடை தருக. 2X10=20

1. விலைப் பொருட்களும் உற்பத்திப் பொருட்களும்
2. பழங்காலத் துறைமுகப் பட்டினங்கள்
3. பண்டமாற்று முறைகள்
4. பண்டையத் தமிழகப் போக்குவரத்துச் சாதனங்கள்.